எக்கட்டாம்பாளையம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. சி. தங்கவேல்

அனுமதி எண்: 2 /2023/மனைப்பிரிவு

நாள்:15.12.2023

பொருள்:மனைப்பிரிவு - ஈரோடு மாவட்டம் - சென்னிமலை வட்டாரம் - எக்கட்டாம்பாளையம் ஊராட்சி/கிராமம் ரீ.ச.எண். 365/1A4,A3 ல் 0.30 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்குவது- தொடர்பாக.

பார்வை:1.மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.AV9G58ZT/2023/TCP நாள்:24.11.2023

2.இவ்வூராட்சி தீர்மான எண்:188/2023 நாள்:23.11.2023.

*****

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி/கிராமம் ரீ.ச.எண். 365/1A4,A3-ல் 0.30 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி பார்வை 1ல் காணும் ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் நடவடிக்கைகளின் படி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் தொழில் நுட்ப அனுமதியைத் தொடர்ந்து எக்கட்டாம்பாளையம் ஊராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1)மனைப்பிரிவு பரிசீலனை கட்டணம்.ரூ.6000/-ம் மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (Market Value) 3% தொகை ரூ.40000/-ம் நில உடமைதாரர்களால் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு விபரம் பெறப்பட்டுள்ளது.

2)பார்வை 2ல் காணும் இவ்வூராட்சி தீர்மானத்தின்படி மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வூராட்சியின் மூலம் எடுக்கப்பட்ட மேற்காணும் நடவடிக்கைகளை தொடர்ந்து ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களின் நடவடிக்கைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு எக்கட்டாம்பாளையம் கிராமம் ரீ.ச.எண். 365/1A4,A3 ல்

0.30 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான (6 மனைகள்) இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

இணைப்பு:

அங்கீகரிக்கப்பட்ட
மனைப்பிரிவு வரைபடம்-1

பெறுதல்:


1.திரு.சாமிநாதன் த/பெ வேலாயுத முதலியார்,
மொரட்டுப்பாளையம்,திருப்பூர்-638752

2.திரு.தாமோதரன் த/பெ சென்னியப்பன்,
சேர்மன் கந்தசாமி நகர்,
திருப்பூர்-641607.

நகல்:
மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
ஈரோடு.

தலைவர்,
எக்கட்டாம்பாளையம் ஊராட்சி,
சென்னிமலை வட்டாரம்.

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட தங்கம் நகர் இருப்பில் ரீ.ச.எண்: 365/1A4, A3ல் 0.30 ஏக்கர் பரப்பாக அமைக்கப்பட்டுள்ள (1-6) மனைகளுக்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின், ந.க.எண்: AV9G58ZT/2023/TCP நாள்: 24.11.2023 ன்படி இடப்பட்ட வரைபடத்திற்கு வழங்கிய தொழில் நுட்ப அனுமதியை தொடர்ந்து, ஊராட்சியின்




தீர்மான எண்: 188/2023 நாள்: 23.11.2023 ன்படி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டு, எக்கட்டாம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 2/2023/மனைப்பிரிவு நாள்: 15.12.2023 ன்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

C. தங்கவேல்

தலைவா,
எக்கட்டாம்பாளையம் ஊராட்சி,
சென்னிமலை வட்டாரம்.

| | |
|---|---|
| வரைவாளர் நிலை III | [signature] |
| மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை II | ஜோ. சிம்சு |

Signature valid
Signed by: Assistant Director
Location: Erode
Date: 2023.11.24 ...53:20

---

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

### சென்னிமலை ஊராட்சி ஒன்றியம்

### எக்கட்டாம்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்- 365/1A4A3-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1 அங்குலம் = 66 அடி (1:800) (ALL DIMENSIONS ARE IN METER)

இணைய வழி விண்ணப்பம் எண் : AV9G58ZT

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனை உட்பிரிவின் மொத்தப்பரப்பு | : 0.30 ஏக்கர் (அ) 1210.00 ச.மீ |
| கோரிய மனைகள் | : 6 |
| ஒதுக்கிய மனைகள் | : 6 |
| மனைப்பிரிவின் எல்லை | |
| நிலையிலுள்ள சாலை | |

**பொது ஒதுக்கீடுகள் :-**

பூங்கா பரப்பு :(மனை உட்பிரிவின் பரப்பு - மனை உட்பிரிவு சாலைகளின் பரப்பு) x 10%
: (1210.00 - 0) x 10% = 121.00 ச.மீ
(மனுதாரரால் அரசு வழிகாட்டிமதிப்பீடு தொகை செலுத்தப்பட உள்ளது)

**கட்டிட வரம்பு :**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண்-18 நதி மற்றும் குதீவ துறை நாள் 04.02.2019 ம் அரசாணை எண்-16 நதி மற்றும் குதீவ துறை நாள் 31.01.2020 ன் படி மனை உட்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும் 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீ.வ மா நவது நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை நாள்:16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனை உட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், எக்கட்டாம்பாளையம் தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனை உட்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனை உட்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
9. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனை உட்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.

SWP /DTCP /ERODE /LAYOUT APPROVAL NO: /2023

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்

(40)